# இயற்கை வழி விவசாயம் - மிளகாய் செய்கை

## *இயற்கை வழி விவசாய முறைமையில் இம்மாரிமழையோடு தீவுப் பகுதிகளில் மிளகாய் செய்கையினைக் அதிகரிப்போமா ?*

மாரி காலத்தில் மிளகாய் செய்கை என்பது இருவாட்டி மண்ணிலோ களிமண்ணிலோ சாத்தியப்படாது. நிலவூற்று ஏற்படுவதினால் வேர்களுக்கு கெடுதலாகிவிடும். அதனால் மிளகாய் மற்றும் மரக்கறிவகைக் கன்றுகளுக்கு சிறந்த நீர் வடிதல் கொண்ட மண்ணாக இருத்தல் அவசியமானது. அதனால் யாழ்குடா நாட்டில் மாரி மழையின்போது வேறூன்றி நிலத்தின் கீழ் செல்லக்கூடிய கன்று வகைகளை செய்கை பண்ணமுடியாது. மணற்பாங்கான நீர் வடிந்து செல்லக்கூடிய அமைப்பைக் கொண்ட மண்ணில் இப்பயிர்களைச் சிறப்பாக வளர்க்கலாம். இவ்வாறான தோட்ட செய்கை முக்கியமாக மிளகாய் செய்கை தீவுப் பகுதிகளில் மாரி காலத்தில் நடப்பட்டு உள்ளூர்ச் சந்தைகளில் பச்சை மிளகாய் காரத்திகை மார்கழி தை மாதங்களில் நல்ல விலைக்கு வருடா வருடமும் விற்பனையாவதை அவதானித்திருக்கலாம். நுகர்வோர் நலனை கருத்தில் கொண்டு கூடுதலானவர்கள் அல்லது கூடிய நிலப் பரப்பளவில் மிளகாய் உற்பத்தியில் ஈடுபட வைப்பதினால் மாரி காலத்தில் பச்சை மிளகாயின் விலையை ஒரு நியாயமான கட்டுக்குள் கொண்டு வருவதும் ஒரு தேவையான கருத்தாகலாம். அத்துடன் தீவுப்பகுதியில் பல புதிய இடங்களிலும் பல புதியவர்களும் மிளகாய் செய்கையில் ஊக்குவிக்கப்பட்டு மேற்கொண்டு வருமானத்தை தேடிக்கொள்ளலாம்.

**இயற்கை வழி விவசாயத்தை கடைப்பிடித்தல்**

இதற்காக கூடிய மாட்டெரு கூட்டெரு தேவைப்படும். இரசாயண பசளை உரங்கள் மருந்துகள் பாவனை முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும். தெளிப்பான்களும் இயற்கை வழி விவசாயத்தை கடைப்பிடித்து வேப்பங்கொட்டைச் சாறு வேப்பிலைச் சாறு - சாணி -மாட்டுச்சலக் கலவை போன்றவற்றை பாவிக்கப் பழகவேண்டும். இயற்கை வழியில் தீவுப்பகுகளில் இம்மாரிப் போகத்தில் மிளகாய் செய்கையினை அதிகரிப்போம்.

*சிறுதானியப்பயிர் உற்பத்தியாளர் சங்கம் விடுக்கும் வேண்டுகோள்*